ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2103/8 - 2018 දෙසැම්බර් මස 24 වැනි සඳුදා - 2018.12.24

*2103/8 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

திருகோணமலை மாவட்டம், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் 229 E கப்பல்துறை கிராம அலுவலர் பிரிவில் திருகோணமலை பிரதேச சபை எல்லைக்குட் பட்டதும் நில அளவையாளர் அதிபதியின் 2017.10.23 ஆந் திகதி எப். வி. பி 21 இல் துண்டிலக்கம் 589, 590 இன் 0.9315 ஹெக்டயார், 0.1909 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு.

**துண்டு இல. 589 - விஸ்தீரணம்: 0.9315 ஹெக்டயார்**

வடக்கு: காணித்துண்டு 590; கிழக்கு: காணித்துண்டுகள் 590 மற்றும் 71; தெற்கு: காணித்துண்டு 71; மேற்கு: காணித்துண்டுகள் 71 மற்றும் 590.

**துண்டு இல. 590 - விஸ்தீரணம்: 0.1909 ஹெக்டயார்**

வடக்கு: காணித்துண்டு 71; கிழக்கு: காணித்துண்டு 71; தெற்கு: காணித்துண்டுகள் 589 மற்றும் 71; மேற்கு: காணித்துண்டு 71.

மேற் குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப் பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜே. எஸ். அருள்ராஜ்,
பிரதேச செயலாளர்,
திருகோணமலை பட்டினமும் சூழலும்,
திருகோணமலை.

பிரதேச செயலகம்,
திருகோணமலை.
2018, திசெம்பர் 21.

01 - 176